[1st February 1963

திரு. டி. கார்ச்சா கவுடர் : யாருக்காக இந்த சுதந்திரம் காக்கும் படை ஆரம்பிக்கப்பட்டதோ, அவர்களே இப்பொழுது சுதந்திரம் காக்கும் படையினராக இருப்பதால், இந்த சுதந்திரம் காக்கும் படையைக் கலைப்பதற்கு யோசிப்பார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு நிமித்தமும் இல்லை. யோசனையும் இல்லை.

Tamil medium in Colleges

*33 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether any extra expenditure is being incurred on account of the introduction of the Tamil medium courses in the Colleges; and

(b) if so, the expenditure incurred in (i) 1960-61, and (ii) 1961–62?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) (i) 1960–61—Rs. 2,25,827.

(ii) 1961–62—Rs. 3,64,801.

திரு. கே. ஏ. மதியழகன் : தமிழ் போதனை மொழியாக ஆக்கப்பட்டிருக்கின்ற கோவைக் கல்லூரிகளிலே 1960-61, 1961-62-இல் முறையே தமிழ் போதனை மொழியாக எடுத்துக்கொண்டு படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை கூடி இருக்கின்றதா ? குறைந்திருக்கின்றதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புள்ளி விவரங்கள் என்னிடம் இல்லை. எண்ணிக்கை கூடி இருக்கிறதென்று சொல்வதற்கில்லை என்பது என்னுடைய ஞாபகம்.

திருமதி சி. கொளந்தை அம்மாள் : கல்லூரிகளில் தமிழ் போதனை மொழியாக கற்பிப்பதற்கு மொழிபெயர்க்கப்பட்ட தமிழ் நூல்கள் வெளியிடுவதற்குச் செலவான தொகை எவ்வளவாயிற்று ? அந்தப் புஸ்தகங்கள் எல்லாம் வெளியிடப்பட்டுவிட்டனவா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனியாகக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கப்படும்.

திரு. கே. ஏ. மதியழகன் : சர்க்கார், நடைமுறை ஆண்டிலே எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் போதனை மொழியாகவேண்டுமென்று கருதுகிறதா ? அல்லது, எந்தெந்த குறிப்பிட்ட கல்லூரிகளில் தமிழ் போதனை மொழியாக இருக்கவேண்டுமென்று, அரசாங்கம் முடிவு செய்துள்ளது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எல்லாக் கல்லூரிகளிலும் தமிழ் போதனை மொழியாக வேண்டும் என்பதல்ல, அரசாங்க கல்லூரிகளான கவர்ன்மெண்டு ஆர்ட்ஸ் காலேஜ், க்வீன் மேரீஸ் காலேஜ். கும்பகோணம் காலேஜ் இந்த மூன்று கல்லூரிகளிலும் தமிழ்

1st February 1963]

போதனு மொழியாக இருக்கவேண்டுமென்று ஒரு செக்ஷனை அமைத்து பாடம் சொல்லிக்கொடுப்பது என்று கருதி அதற்குப் பல்கலைக்கழக அங்கீகாரத்தை கேட்டிருக்கிறோம்.

திரு. கி. இரா. சம்பந்தம்: சைன்ஸ், கெமிஸ்ட்ரி போன்ற நூல்கள் எல்லாம் தமிழாக்கப்பட்டிருக்கின்றனவே, அவை தனியார் துறையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றனவா? அல்லது சர்க்கார்த் துறையில் தயாரிக்கப்பட்டிருக்கின்றனவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அம்மாதிரி பாடப் புஸ்தகங்கள் எல்லாம் தமிழ் ஆக்கப்படும் என்று சொல்வதற்கில்லை. இப்போது பீரோ ஆப் டமில் பப்ளிகேஷன் என்ற குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு சில பாடப் புஸ்தகங்களை வெளியிட்டிருக்கிறது. மேலும் சில பாடப் புஸ்தகங்கள் ஸ்டாண்டர்ட் பாடப் புஸ்தகங்களாக மொழி பெயர்க்கப்படுவதற்கு இப்பொழுது கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழை போதனு மொழியாகச் செய்வதற்கு தனியார்க் கல்லூரிகளில் இருந்து விண்ணப்பங்கள் வந்துள்ளனவா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எனக்குத் தெரிந்தவரை ஒரு கல்லூரியிலிருந்து விண்ணப்பம் வந்துள்ளது. அதுவும் ஆங்கிலத்தையும் சேர்த்து ஒரு செக்ஷன் கேட்டிருக்கிறார்கள். எகனுமிக்ஸ் போன்ற பாடங்கள் என்று நினைக்கிறேன்.

திரு. ஜே. மாதா கவுடர்: ஸார், தமிழ் போதனு மொழியாக உள்ள கல்லூரிகளில் மாணவர்கள் சேர்ந்து படிக்க முன்வரவில்லை என்று சர்க்காருக்குத் தெரியுமா? அங்கு சேர்ந்து படித்தால் அவர்களுடைய படிப்பின் தரம் குறைந்து விடும், அவர்களுக்கு அகில இந்திய சர்வீசில் வேலை கிடைக்காது என்று மாணவர்களுடைய பெற்றோர்கள் அந்தக் கல்லூரிகளுக்கு அனுப்ப முன் வரவில்லை என்பதும் தெரியுமா? அப்படியானல் தமிழ் போதனு மொழிக் கல்லூரிகளுக்காக வீணுகப் பணம் செலவழிக்கப்படுவதை நிறுத்த சர்க்கார் முன் வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: போதிய அளவுக்கு மாணவர்கள் தமிழ் போதனு மொழியாக எடுத்துக்கொள்ள முன் வரவில்லை என்பது உண்மை. ஆனல் வருகிறவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும், அவர்களுக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்ற காரணத்திற்காக தமிழ் மூலமாகவும் பாடம் கற்றுக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்து வருகிறது—செலவும் செய்து வருகிறது.

திரு. பி. பழனிப் பிள்ளை: கல்லூரிகளுக்கு வேண்டிய பாடப் புத்தகங்களை மொழி பெயர்ப்பது குறித்து அந்த வேலை பூர்த்தி ஆவதற்கு ஏதாவது கால வரையறை இருக்கிறதா? அல்லது மொழி பெயர்ப்பு முடிய நீண்ட நாள் ஆகும் என்று சர்க்கார் கருதுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: விஞ்ஞான பாடங்களை மொழி பெயர்ப்பதிலோ அல்லது அசல் நூல்கள் எழுதுவதிலோ கால தாமதம் ஏற்படத்தான் செய்யும். இதிலே அவசரப்படுவதால் பயன் இல்லை.

[1st February 1963

திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் : தமிழை போதனு மொழி ஆக்குவதில் ஏற்கனவே இருந்து வந்த உற்சாகம் நமது அரசாங்கத்திற்கு வரவரக் குறைந்து வருகிறது என்று மக்கள் அபிப்பிராயம் இருக்கிறதே அது வாஸ்தவமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் இப்போதுதான் சொன்னேன் மூன்று சர்க்கார் கல்லூரிகளில் தமிழ் போதனு மொழியாகக் கொண்ட பிரிவுகள் ஏற்படுத்த சர்வகலாசாலையின் அங்கீகாரம் கோரப்பட்டிருக்கிறது என்று. சென்ற ஆண்டிலே ஒரு கல்லூரியிலும் அந்த மாதிரி ஏற்பாடு செய்யப்படவில்லை. இதை வைத்துக் கொண்டு எந்த அபிப்பிராயம் வேண்டுமானுலும் வைத்துக் கொள்ளலாம்.

திரு. ஜே. மாதா கவுடர் : தமிழ் மொழிபெயர்ப்பு என்று சொல்லி பஸ் ஸ்டாண்ட் என்பதற்கு 'உந்து வண்டி நிலையம்' என்று எழுதியிருக்கிறுர்கள். 'உந்து வண்டி' என்றுல் என்ன என்று புரியாத நிலை இருக்கிறது. இந்த மாதிரி புரியாத நிலையில் பாடப் புத்தகத்திலும் போட்டு இது போன்ற மொழிபெயர்ப்புகளை வைத்து மாணவர்களுக்குக் கஷ்டம் கொடுக்காமல் இருக்க எளிய முறையில் தமிழில் சொல்லிக்கொடுக்க முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பாடப் புத்தகங்களைப் பொருத்த மட்டில், 'உந்து வண்டி' போன்ற வார்த்தைகள் இல்லாமல் இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தும்.

Baby Food Factory

* 34 *Q.*—Sri K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Baby Food Factory; and

(*b*) if so, when and where?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (*a*) & (*b*) நீலகிரி மாவட்டத்தில் குழந்தைகளுக்கான பாலுணவு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதன் சாத்தியக்கூறுபற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : அந்தத் தொழிற்சாலை தனியார் துறையிலா அல்லது சர்க்கார் துறையிலா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்போதுதான் ஒரு அப்ளிகேஷன் வந்திருக்கிறது. அது தனியாரிடமிருந்து வந்திருக்கிறது. அது முடியுமா முடியாதா என்று சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறுர்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டிலே தாய்களுக்கு மிகவும் சந்தோஷச் செய்தி என்று சொன்னுர்கள். அவர்களுடைய சந்தோஷம் பூர்த்தி அடையுமா ?—இப்போது சந்தேக தொனியில் சொல்லுகிறுர்களே.